Written by Administrator
Friday, 10 September 2010 00:00 - Last Updated Thursday, 07 October 2010 08:30

□□□□□□□□□□□□□□

Written by Administrator
Friday, 10 September 2010 00:00 - Last Updated Thursday, 07 October 2010 08:30

இந்தியாவிலுள்ள அனைத்து நீர் நிலைகளும் அவற்றின் 'பயன்பாடுத்து வதற்கு சிறந்தது' விதத்தின் அடிப் படையில் தரம் பிரிக்கப்படுகின்றன. அதனடிப்படையில் 'நீர் பயன்பாட்டு வரைபடம்' தயாரிக்கப்படுகிறது. நீர் நிலைகளையும், அதன் கிளைகளையும் அடையாளம் காண அவற்றின் தரத்தை மதிப்பிடுவது மிகவும் முக்கியமாகும். இது இந்தியாவின் தண்ணீர் தர வரை படத்தைத் தயாரிக்க உதவும். நீர் நிலைகள் மற்றும் அவற்றின் கிளைகளின் தண்ணீர் தரத்தை மேம்படுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்த நிலையில், நீர்நிலைகளை அடையாளம் காண தற்போது கடைப்பிடிக்கப்படும் நீர் பயன்பாட்டு வரைபடத்திற்கு பதில் நீர் தர வரைபடத்தை பயன்படுத்தலாம் என்ற நோக்கில்தான் நீர் தர வரைபடம் தயாரிக்கப்படுகிறது. தரமுறுபடுத்தப்பட்ட தண்ணீரின் தரத்தை பராமரிக்க கட்டமைப்பின் மூலம் கண்காணிப்பதால், தண்ணீரின் தரம் பற்றிய விவரங்களை சேகரிக்க முடியும். இந்தியாவிலுள்ள பெரும்பாலான நீர்நிலைகள் மாசடையவாக கண்டறியப்பட்டுள்ளன. இவை அவற்றின் பழைய தூய்மை அளவுக்கு மேம்படுத்தப்பட வேண்டும். இந்தியாவில் கங்கை ஆற்று செயல் திட்டம் மற்றும் தேசிய ஆறுகள் செயல் திட்டம் உட்பட அனைத்து தண்ணீர் தர மேலாண்மை தொடர்பான கொள்கை களும் திட்டங்களும் இதன் அடிப்படையில் அமைந்ததனால் என்பது குறிப்பிடத் தக்கது. பல விசேஷங்களின் போது ஆறுகளில் மக்கள் ஒட்டுமொத்தமாக குளிப்பதால், அதற்கேற்ற தரத்துடன் தண்ணீர் உள்ளதா (தூய்மை-2) என்பதை ஆய்வு செய்து நிர்ணயிக்க அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

அட்டவணை 2 : குளிப்பதற்கான தண்ணீரின் அடிப்படைத் தரம்

தரக்காரணிகள்			காரணம்
1. மலக்கழிவுகள் (விரும்பத்தக்கது) MPN/100 மி.லி. (அனுமதிக்கப்படத்தக்கது)	:	500 2,500	குறைந்த அளவு கழிவு இருப்பதை உறுதி செய்தல், மலக்கழிவுகள் மற்றும் மலத்தில் உள்ள பாக்சீரியாக்களின் அளவு நீரில் உள்ள பாக்சீரியா பாதிப்பை எதிரொலிப்பவையாகும்.
2. மலத்தில் பாக்சீரியா (விரும்பத்தக்கது) MPN/100 மி.லி. (முதிய அளவு அனுமதிக்கப்படத்தக்கது)	:	100 500	விரும்பத்தக்க அளவு - அனுமதிக்கப்பட்ட அளவு என இரு அளவுகள் தரப்படுத்துவதற்கு காரணம் காலநிலை போன்ற சுற்றுசூழல் காரணங்களால் அவற்றின் அளவுகள் மாறுபடும் என்பதால்தான்.
3. PH 6.5 முதல் 8.5 வரை இருக்க வேண்டும்.			இந்த அளவுகள் இருந்தால்தான் தோல், கண்கள், காது, மூக்கு போன்ற உறுப்புகளுக்கு (குளிக்கும்போது நேரடியாக தண்ணீர்படுபவை) எந்த பாதிப்பும் ஏறபடாமல் இருக்கும்.
4. நீரில் கரைந்துள்ள ஆக்சிஜன் அளவு	:	5 மி.கி. லிட்டர் அல்லது கூடுதல்	ஒரு லிட்டர் தண்ணீரில் 5 மி.கி அளவுக்காவது ஆக்சிஜன் கரைந்திருந்தால் தான் ஆக்சிஜனை உட்கொள்ளும் இயற்கை மாசுவிலிருந்து விடுதலை கிடைக்கும். அதாவது, அப்போதுதான் தண்ணீரில் உள்ள கழிவுகளிலிருந்து விடுவாய் வெளியேறமால் இருக்கும்.
5. உயிர் வேதியல் ஆக்சிஜன் தேவை (3நாட்கள்-27°C)	:	3 மி.கி. லிட்டர் அல்லது குறைவு	இந்த அளவுக்கு குறைவான ஆக்சிஜன் தேவை இருந்தால்தான் ஆக்சிஜன் தேவைப்படும் மாசுக்களிலிருந்து விடுதலை கிடைக்கும். அப்போதுதான் விடுவாய் உருவாவதை தடுக்க முடியும்.

இந்தியாவிலுள்ள 353 சிறிய, பெரிய, நடுத்தர ஆறுகளின் தண்ணீர் தரம் கண்காணிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆற்றிலும் எந்த அளவுக்கு நீர்மம் இருக்க வேண்டும் என்ற அளவும், ஒவ்வொரு ஆற்றின் நீர்மம் அவ்வப் போது மாற்றப்படுகின்றன. முடிவும் நீர் நிலையின் உயிர்வேதியல் ஆக்சிஜன் தேவை அளவு அதிகரிக்கும்போது, அப் பகுதியில் ஆற்றின் நீர்மத்தை அதிகரிக்க வேண்டும். எந்தெந்த ஆறுகளில், எந்தெந்த பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன என்பது குறித்த விவரங்கள் இதோ தரப்பட்டிருக்கின்றன.

ஆந்திரா : முசி ஆறு - ஹைதராபாத் முதல் ரெங்காரெட்டி வரை. நக்கவாகு ஆறு - மேடக் மாவட்டம். மஞ்சீரா ஆறு - கவுடிச்சர்லா மாவட்டம் (நக்கவாகு ஆற்றுடன் இணைந்து) கிருஷ்ணா ஆறு - வடபள்ளி மாவட்டம் முசி ஆறு இணைந்து): கோதாவரி ஆறு-ராஜ முந்திரி மாவட்டம். மானேர் ஆறு-வாரங்கல் மாவட்டம் முழுவதும்.

அஸ்ஸாம் : பரலு ஆறு - கவுகாத்தி மாவட்டம் ; கடோலு ஆறு - நாகோன் மாவட்டம்.

தில்லி : யமுனை ஆறு - வாசிராபாத் முதல் ஓக்லா மற்றும் அதன் பிறகுள்ள பகுதிகள்.

குஜராத் : சபர்மதி ஆறு - அகமதாபாத் முதல் வௌதரா மாவட்டம் அல்லாகாத் ஆறு - அங்கேஸ்வர் பகுதி முழுவதும்; போகவோ ஆறு - கடுநந்தி நகர் மாவட்டம் ; துமக்காங்கா ஆறு - வாபி மாவட்டம் முதல் கடலில் கலக்கும் வரை ; கார் ஆறு - வாவி சிறுநார் வழி நெடுகிலும் ; தாபி ஆறு - ராண்டர் பாலம் முதல் வுத்வரை கிம் ஆறு - சூரத்.

ஹரியானா : காகர் ஆறு - அதன் பாதை முழுவதும், மார்கண்டா ஆறு - கலா முதல் நாராயண் நினைவிடம் வரை ; யமுனை கால் வாய் - யமுனா நகர், குர்னாள் கால் வாய் - திவ்லி மாவட்டம்.

மத்திய பிரதேசம் : கான் ஆறு - இந்தூர் முழுவதும் ; சம்பல் ஆறு - நக்தா மாவட்டம் ; கஷ்டிரா ஆறு - உஜ்ஜைன் முதல் சம்பல் ஆற்றில் கலக்கும் வரை ; பெத்வா ஆறு - மன்தி தீப்பிலிருந்து விதிஷா வரை.

மராட்டியம் : மீனா ஆறு - புனே (தென்புறம்) முதல் டல்லி வரை ; கோதாவரி ஆறு - நாசிக் முதல் பைத்தான் வரை ; முலா & முதா ஆறு - புனே நகரம். பாவனா ஆறு - புனே சங்கவி கோன் வரை ; இந்திராயனி ஆறு - ஆலன்தி முதல் மீன ஆறு வரை ; கொய்னா ஆறு - கராத் மாவட்டம் ; மிதி ஆறு - மும்பை பகுதி முழுவதும் ; குண்டலிகா ஆறு- ஆர்ஞ்சித் முதல் ரோஹா நகரம் வரை; தாபி ஆறு - மத்தியப்பிரதேச எல்லை முதல் புஸாவல் வரை ; சீனா ஆறு - மெலேகோன் முதல் ஜல்கோன் வரை ; நீரா ஆறு - புனே மாவட்டம் ; வெயிங்கங்கா ஆறு - அஸ்தி மாவட்டம் வர்தா ஆறு - ராஜுரா சிராமத்தை ஒட்டிய பகுதிகள் ; மீமா ஆறு - நரசிங்பூர் மாவட்டம் ; கிருஷ்ணா ஆறு - தோம்தாம் முதல் கோலாப்பூர் வரை ; பூர்னா ஆறு - அந்தூர சிராமத்தை ஒட்டிய பகுதிகள்; நீரா ஆறு-புல்கேனை ஒட்டிய பகுதிகள்; சந்திரபாகா ஆறு - பந்தர்பூர் நகரை ஒட்டிய பகுதிகள் : வெண்கா ஆறு - வொபி, சத்தாரா மாவட்டங்கள் ; **கலு ஆறு** - அத்தாலே கீராமம் முதல் உல்காஸ் ஆற்றில் கலப்பது வரை ; கண்ஹன் ஆறு- நாக்பூர் மாவட்டம் ; கோலார் ஆறு - காம்பல் நகரை ஒட்டிய பகுதிகள் : உல்காஸ் ஆறு - மோகனே நகரம் ; பஞ்சங்கா ஆறு - கோலாப்பூர் : பதகிகங்கா ஆறு - கோபாலி முதல் எஸ்டரின் பகுதிவரை : நங்கவல்லி ஆறு - நவ்டபூரை ஒட்டிய பகுதிகள்.

பஞ்சாப் : சட்லஜ் ஆறு - ஹெனித் காசிய ஆலை முதல் அபிர்தசரஸ் ஹுசைனிவாலா வரை : காஹனி ஆறு - குயாக்பூர் முதல் சாஹுகாக் ரெஹார்ப் மாநிலத்தில் ஓடும் பாதை முழுவதும்.

தமிழ்நாடு : அடையாறு - சென்னையை ஒட்டி பகுதிகள் ; கூவம் ஆறு - சென்னையை ஒட்டிய பகுதிகள்; வைகை ஆறு - மதுரையை ஒட்டிய பகுதிகள் : தாமிரபரணி ஆறு - அம்பா சமுத்திரத்தையொட்டிய பகுதிகள் : காவிரி ஆறு - திருச்சி முதல் கல்லணை வரை ; பவானி ஆறு - பவானி சாகர் மற்றும் பவானி ; நொய்யல் ஆறு - கோவை திருப்பூரையொட்டிய பகுதிகள்.

உத்தரபிரதேசம் : யமுனை ஆறு- கேசரிகலன் முதல் நீலகுதா வரை ; ஹிண்டன் ஆறு - சாஹரான்பூர் முதல் யமுனை ஆற்றில் கலப்பது வரை ; மேற்கு காலி ஆறு - முஜாபர்பூர்ல் தொடங்கி ஹிண்டன் ஆற்றில் கலப்பது வரை ; கிழக்கு காலி ஆறு. - மீரட் முதல் கன்னோஜ் வரை : பாகத் ஆறு - கதிரௌலை மாவட்டம் ; கங்கை ஆறு - கன்னோஜ் முதல் வாரணசி மாவட்டம் : கோமதி ஆறு - லக்னோ முதல் ஜான்பூர் வரை : ராம்கங்கா ஆறு - மொராதாபாத் முதல் கன்னோஜ் வரை.

கர்நாடகா : படார ஆறு - படார வதி மாவட்டதில் தொடங்கி துங்கை - கவுடசர்ரா மாவட்டம் (நக்கவாகு ஆற்றுடன் இணைந்து) கிருஷ்ணா ஆறு - வடபள்ளி மாவட்டம் முசி ஆறு இணைந்து): கோதாவரி ஆறு-ராஜ முந்திரி மாவட்டம். மானேர் ஆறு-வாரங்கல் மாவட்டம் முழுவதும்.

அஸ்ஸாம் : பரலு ஆறு - கவுகாத்தி மாவட்டம் ; கடோலு ஆறு - நாகோன் மாவட்டம்.

தில்லி : யமுனை ஆறு - வாசிராபாத் முதல் ஓக்லா மற்றும் அதன் பிறகுள்ள பகுதிகள்.

குஜராத் : சபர்மதி ஆறு - அகமதாபாத் முதல் வௌதரா மாவட்டம் அல்லாகாத் ஆறு - அங்கேஸ்வர் பகுதி முழுவதும்; போகவோ ஆறு - கடுநந்தி நகர் மாவட்டம் ; துமக்காங்கா ஆறு - வாபி மாவட்டம் முதல் கடலில் கலக்கும் வரை ; கார் ஆறு - வாவி சிறுநார் வழி நெடுகிலும் ; தாபி ஆறு - ராண்டர் பாலம் முதல் வுத்வரை: கிம் ஆறு - சூரத்.

ஹரியானா : காகர் ஆறு - அதன் பாதை முழுவதும், மார்கண்டா ஆறு - கலா முதல் நாராயண் நினைவிடம் வரை ; யமுனை கால் வாய் - யமுனா நகர், குர்னாள் கால் வாய் - திவ்லி மாவட்டம்.

மத்திய பிரதேசம் : கான் ஆறு - இந்தூர் முழுவதும் ; சம்பல் ஆறு - நக்தா மாவட்டம் ; கஷ்டிரா ஆறு - உஜ்ஜைன் முதல் சம்பல் ஆற்றில் கலக்கும் வரை : பெத்வா ஆறு - மன்தி தீப்பிலிருந்து விதிஷா வரை.

மராட்டியம் : மீனா ஆறு - புனே (தென்புறம்) முதல் டல்லி வரை : கோதாவரி ஆறு - நாசிக் முதல் பைத்தான் வரை ; முலா & முதா ஆறு - புனே நகரம். பாவனா ஆறு - புனே சங்கவி கோன் வரை : இந்திராயனி ஆறு - ஆலன்தி முதல் மீன ஆறு வரை ; கொய்னா ஆறு - கராத் மாவட்டம் ; மிதி ஆறு - மும்பை பகுதி முழுவதும் ; குண்டலிகா ஆறு- ஆர்ஞ்சித் முதல் ரோஹா நகரம் வரை: தாபி ஆறு - மத்தியப்பிரதேச எல்லை முதல் புஸாவல் வரை ; சீனா ஆறு - மெலேகோன் முதல் ஜல்கோன் வரை ; நீரா ஆறு - புனே மாவட்டம் ; வெயிங்கங்கா ஆறு - அஸ்தி மாவட்டம் வர்தா ஆறு - ராஜுரா சிராமத்தை ஒட்டிய பகுதிகள் ; மீமா ஆறு - நரசிங்பூர் மாவட்டம் ; கிருஷ்ணா ஆறு - தோம்தாம் முதல் கோலாப்பூர் வரை ; பூர்னா ஆறு - அந்தூர சிராமத்தை ஒட்டிய பகுதிகள்: நீரா ஆறு-புல்கேனை ஒட்டிய பகுதிகள்; சந்திரபாகா ஆறு - பந்தர்பூர் நகரை ஒட்டிய பகுதிகள் : வெண்கா ஆறு - வொபி, சத்தாரா மாவட்டங்கள் ; **கலு ஆறு** - அத்தாலே கீராமம் முதல் உல்காஸ் ஆற்றில் கலப்பது வரை ; கண்ஹன் ஆறு- நாக்பூர் மாவட்டம் ; கோலார் ஆறு - காம்பல் நகரை ஒட்டிய பகுதிகள் : உல்காஸ் ஆறு - மோகனே நகரம் ; பஞ்சங்கா ஆறு - கோலாப்பூர் : பதகிகங்கா ஆறு - கோபாலி முதல் எஸ்டரின் பகுதிவரை : நங்கவல்லி ஆறு - நவ்டபூரை ஒட்டிய பகுதிகள்.

பஞ்சாப் : சட்லஜ் ஆறு - ஹெனித் காசிய ஆலை முதல் அபிர்தசரஸ் ஹுசைனிவாலா வரை : காஹனி ஆறு - குயாக்பூர் முதல் சாஹுகாக் ரெஹார்ப் மாநிலத்தில் ஓடும் பாதை முழுவதும்.

தமிழ்நாடு : அடையாறு - சென்னையை ஒட்டி பகுதிகள் ; கூவம் ஆறு - சென்னையை ஒட்டிய பகுதிகள்; வைகை ஆறு - மதுரையை ஒட்டிய பகுதிகள் : தாமிரபரணி ஆறு - அம்பா சமுத்திரத்தையொட்டிய பகுதிகள் : காவிரி ஆறு - திருச்சி முதல் கல்லணை வரை ; பவானி ஆறு - பவானி சாகர் மற்றும் பவானி ; நொய்யல் ஆறு - கோவை திருப்பூரையொட்டிய பகுதிகள்.

உத்தரபிரதேசம் : யமுனை ஆறு- கேசரிகலன் முதல் நீலகுதா வரை ; ஹிண்டன் ஆறு - சாஹரான்பூர் முதல் யமுனை ஆற்றில் கலப்பது வரை ; மேற்கு காலி ஆறு - முஜாபர்பூர்ல் தொடங்கி ஹிண்டன் ஆற்றில் கலப்பது வரை ; கிழக்கு காலி ஆறு. - மீரட் முதல் கன்னோஜ் வரை : பாகத் ஆறு - கதிரௌலை மாவட்டம் ; கங்கை ஆறு - கன்னோஜ் முதல் வாரணசி மாவட்டம் : கோமதி ஆறு - லக்னோ முதல் ஜான்பூர் வரை : ராம்கங்கா ஆறு - மொராதாபாத் முதல் கன்னோஜ் வரை.

கர்நாடகா : படார ஆறு - படார வதி மாவட்டதில் தொடங்கி துங்கை

மற்றும் பாக்சீரியக்களால் ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்ந்து மிக அதிக அளவில் இருந்து வருவது தெரிய வந்துள்ளது. இதற்குக் காரணம் நகர்ப்புற வீடுகளில் கழிவுகள் சுத்திகரிக்கப்படாமலேயே ஆறுகளில் கலக்கவிடப்படுவதுதான். மேலும் நகர்புறங்களில் சுத்திகரிக்கப் படாமலேயே நீர் நிலைகளில் கலக்கும் கழிவு நீரை சுத்திகரிக்கும் திறன் மாநக ராட்சிகளுக்கு இல்லை. அதனடிப்படையில், தங்களிடம் சேரும் கழிவுகளை நீர்த்துப் போகச் செய்யும் அளவுக்கு நீர்நிலை களிலும் தண்ணீர் இல்லை. எனவே ஆக்சிஜன் தேவையும், பாக்சீரியா பாதிப்பும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தண்ணீர் சார்ந்த நோய்கள் பரவுவதற்கு இதுதான் முக்கியக் காரணம்.

தண்ணீரின் தரத்தினைக் கண் காணிக்கும் போது, அதில் உயிரி - வேதியல் ஆக்சிஜன் தேவை எவ்வளவு உள்ளது? மலக்கழிவு மற்றும் மல பாக்சீரியாக்கள் எவ்வளவு உள்ளன என்பது ஆய்வு செய்யப்படுகிறது. இந்த ஆய்வுகளிலும் தண்ணீரின் தரம் படிப்படியாக சீரழிந்து வருகிறது என்பது தெரியவந்துள்ளது.

தண்ணீர் தர கண்காணிப்பு கட்டமைப்பை வலுப்படுத்துதல்

மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் கீழ் இயங்கும் தண்ணீர் தர கண் காணிப்பு மையங்களின் கட்டமைப்பை வலுப்படுத்த திட்டக்குழு முடிவு செய்தி ருக்கிறது. 11வது ஐந்தாண்டு திட்டக் காலத்தின் இறுதிக்குள் இந்த நிலையங் களின் எண்ணிக்கை இப்போதுள்ள 1,700லிருந்து 2,500 ஆக உயர்த்தும் திட்டக்குழு முடிவு செய்திருக்கிறது. இப்போதுள்ள கண்காணிப்பு நிலையங் களின் எண்ணிக்கை போதுமானவையாக இல்லை என்றாலும், அனைத்து நீர் நிலையங்களிலும் இவை அமைக்கப் படவில்லை என்றாலும் இவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்க திட்டக்குழு முடிவு செய்துள்ளது. இப்போதைய நிலையில் ஆறுகளில் முறையே 55 கி.மீ தொலைவுக்கு ஓர் நிலையம் அமைந்திருக்கிறது. மக்கள்தொகை அதிகரித்து வருவதையும், நகர்புறங்கள் பெருகி வருவதையும் கருத்தில் கொண்டு புதிய தொழிற்சாலைகள் மற்றும் பெருநகர வடிகால்களில் தண்ணீரின் தரத்தை ஆய்வு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

மாசுபட்ட ஆற்றுப்பகுதிகளை அடையாளம் காணுதல்

இந்தியாவில் உள்ள ஆறுகளின் தண்ணீர் தரம் பற்றிய விவரங்கள் ஆய்வு செய்யப்படுகின்றன. அந்த ஆறுகளில் எந்தெந்த பகுதிகளில் உள்ள தண்ணீரின் தரம், நிர்ணயிக்கப் பட்ட அளவுக்கும் குறைவாக உள்ளதோ அப்பகுதிகளெல்லாம் மாசுபட்ட பகுதிக அறுதியிடப்படுகிறது. எந்தெந்த பகுதி களிலெல்லாம் பாதிப்பு ஏறபட அதிக வாய்ப்புகள் உள்ளனவோ அந்த பகுதிகள் அனைத்தும் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய பகுதிகள் ஆகும். ஒரு பகுதி பாதிப்பு உள்ள பகுதியா? என்பது கீழ்க் கண்ட முறையிலான் கண்டுபிடிக்கப் படுகிறது.

பாதிப்பு = தரக்காரணிகளின் அளவு நிர்ணயிக்கப்பட்டதைவிட எந்த அளவுக்கு அதிகமாக உள்ளன x விளைவுகள்.

தரக்குறைவின் அளவு என்பது, இயல்பாக நீரில் இருக்கவேண்டிய உயிரி-வேதியல் ஆக்சிஜன் தேவைக்கு (BOD), ஒரு குறிப்பிட்ட நீரில் இருக்கும் BOD அளவுக்கும் இடையிலான வேறு பாடு ஆகும். இவ்வாறு ஓர் ஆற்றின் பல பகுதிகள் மாசுபட்டு இருந்தால், அது மாசுபட்ட ஆற்றுப்பகுதி என வரையறுக்கப்படுகிறது.

முதல் முன்னுரிமைக்கான காரணிகள்

1. ஆற்றின் எந்தெந்த பகுதிகளில் எல்லாம் BOD அளவு லிட்டருக்கு 30 மி.கிராமுக்கு அதிகமாக இருக்கிறதோ, அப்பகுதிகளெல்லாம் முன்னுரிமை அடிப்படையில் தரம் உயர்த்தப்பட வேண்டியவை ஆகும். ஏனெனில் இந்த அளவுக்கு BOD இருந்தால் அது கழிவு நீர் தரத்தில்தான் இருக்கும். இந்தக் கழிவுகள் ஆறுகளில் நீர்த்துப் போகாமலேயே இருக்கும்.

2. எந்தெந்த பகுதிகளிலெல்லாம் எல்லா நேரத்திலும் BOD அளவு லிட்டருக்கு 6 மி.கிராமுக்கு அதிகமாக இருக்கிறதோ அப்பகுதிகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

3. ஏதேனும் பகுதிகளில் உள்ள தண்ணீரில் BOD அளவு லிட்டருக்கு 3 மி.கிராமுக்கு அதிகமாக இருந்தால், அது விரும்பத்தகுந்த தரம் அல்ல. ஆனால் அது தண்ணீரில் கரைந்துள்ள ஆக்சிஜன் அளவை பாதிப்பதில்லை. அதேநேரத்தில் BOD அளவு லிட்டருக்கு 6 மி.கிராமுக்கு அதிகமானால் அது தண்ணீரில் கரைந்திருக்கும் ஆக்சிஜன் அளவை பாதிக்கும்.

4. நகர்புறங்களில் வீடுகளுக்கு வழங்கப்படும் தண்ணீரில் BOD அளவு லிட்டருக்கு 5 மி.கிராம் வரை இருந்தால், அதில் குளோரின் கலக்கும்போது கூட்டு ரசாயனப் பொருட்கள் எதுவும் உருவா வதில்லை. எனவே BOD 6 மி.கி/லி என்ற அளவுக்கும் அதிகமாக இருந்தால் அது மாசுபட்ட நீராகக் கருதப்பட்டு, அதை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும்.

5. முன்னுரிமை அளிக்கப்படு வதற்காக அடையாளம் காணப்பட்ட ஆற்றுப்பகுதிகளின் எண்ணிக்கை தனியாக இணைக்கப்பட்டிருக்கிறது.



இரண்டாவது
முன்னுரிமைக்கான காரணிகள்

6. தண்ணீரில் BOD அளவு லிட்டருக்கு 20-30 மி.கி இருக்கும் பகுதிகள்.

7. எல்லா நேரத்திலும் BOD அளவு லிட்டருக்கு 6 மி.கிராமுக்கு அதிகமாக இருக்கும் பகுதிகள்.

8. அடையாளம் காணப்பட்ட பகுதிகளின் எண்ணிக்கை இணைக்கப்பட்டிருக்கிறது.

மூன்றாவது
முன்னுரிமைக்கான காரணிகள்

9. தண்ணீரில் BOD அளவு லிட்டருக்கு 10-30 மி.கி இருக்கும் பகுதிகள்.

10. எல்லா நேரத்திலும் BOD அளவு லிட்டருக்கு 6 மி.கிராமுக்கு அதிகமாக இருக்கும் பகுதிகள்.

11. அடையாளம் காணப்பட்ட பகுதிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன.

நான்காவது
முன்னுரிமைக்கான காரணிகள்

12. தண்ணீரில் BOD அளவு லிட்டருக்கு 6-10 மி.கி இருக்கும் பகுதிகள்.

13. அடையாளம் காணப்பட்ட பகுதிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன.

ஐந்தாவது
முன்னுரிமைக்கான காரணிகள்

14. தண்ணீரில் BOD அளவு லிட்டருக்கு 3-6 மி.கிராம் இருக்கும் பகுதிகள்.

15. எல்லா நேரத்திலும் BOD அளவு லிட்டருக்கு 3 மி.கிராமுக்கு அதிகமாக இருக்கும் பகுதிகள்.

16. அடையாளம் காணப்பட்ட பகுதிகளின் எண்ணிக்கை இணைக்கப் பட்டிருக்கிறது.

முன்னுரிமை வாரியான ஆற்றுப் பகுதிகளின் எண்ணிக்கை விவரம் பின் வருமாறு :

முன்னுரிமை வரிசை	ஆற்றுப்பகுதிகளின் எண்ணிக்கை
முன்னுரிமை - 1	35
முன்னுரிமை - 2	15
முன்னுரிமை - 3	26
முன்னுரிமை - 4	38
முன்னுரிமை - 5	36
மொத்தம்	150

தண்ணீரின் தரத்தை
மேம்படுத்துவதில் உள்ள சிக்கல்கள்

1. பாசனத் தேவைகளை கருத்தில் கொண்டு, உயரமான பகுதிகளில் அணை கட்டி ஆற்று நீர் அடைக்கப்பட்டு வதால், ஆற்றுநீர் நீண்ட தொலைவுக்கு ஓடுவதில்லை.

2. வறட்சி கால நீரோட்டம் கால் வாய்களில் திருப்பிவிடப்படுகிறது.

3. நீர்மட்டம் குறைவதால், புழுப் பிக்கப்பட்ட நீரோட்டத்தின் வேகம் குறைகிறது.

4. மக்கள்தொகை வேகமாக பெருகி வருவதாலும், கழிவுநீர் அமைப்புகள் அதிக அளவில் ஏற்படுத்தப்படுவதாலும் ஆறுகளில் கலக்கும் கழிவு நீரின் அளவு அதிகரித்துவிட்டது.

5. பல்வேறு திட்டங்களின் அடிப் படையில் தொடங்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அதன் நிர்ணயிக்கப்பட்ட திறன் அளவுக்கு செயல்படவில்லை. சில நிலையங்கள் திறனுக்கு குறைவாகவும், பல நிலை யங்கள் திறனுக்கு அதிகமாகவும் செயல் படுகின்றன.

6. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங் களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட மின் வசதி இல்லை.

தண்ணீரின் தரத்தை
மேம்படுத்துவதற்கான உத்திகள்

1. நாடு முழுவதும் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், கழிவு நீர் ஏற்றும் நிலையங்கள் ஆகியவற்றை புதுப்பிக்க வேண்டும்.

2. எந்தெந்த நகரங்களில் எல்லாம் சுத்திகரிப்பு திறனை விட அதிக கழிவுநீர் உற்பத்தியாகி, கூடுதல் நீர் ஆற்றில் விடப்படுகிறதோ, அங்கெல்லாம் புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலை யங்கள் அமைக்கப்பட வேண்டும்.

3. எந்தெந்த பகுதிகளில் எல்லாம் சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் ஓடுகிறதோ, அவற்றை எல்லாம் தடுத்து கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு திருப்பி விடுதல்.

4. சொத்துரிமைகள் அனைத்தும் மாநில பொது சுகாதாரத் துறையிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

5. ஆறுகளின் நீரோட்டத்தை வேகப்படுத்த வேண்டும்.

6. ஆற்று நீரோட்டத்தின் வேகம் குறைந்து வருவதால், அதை சரி செய்யும் வகையில் கழிவு நீர் சுத்தி கரிப்பு மற்றும் தொழிற்சாலைக் கழிவு களுக்கான தரநிர்ணயங்கள் கடுமையாக்கப்பட வேண்டும்.

7. குழாய்கள் வழியாக தண்ணீர் கொண்டு செல்லப்படும் போதோ அல்லது கிராமப் பகுதிகளில் உள்ள மேம்படுத்தப்பட்ட சுத்திகரிப்பு நிலையங் களிலோ தண்ணீர் மாசடைவதை தடுக்க மாற்று வழிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். ■